**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: C.C. 42/2008**
**Deposition of witness for prosecution -PW-11**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.இளவேனில் |
| Husband Name | : | திரு.செல்வகுமார் |
| Village | : | காரைக்குடி |
| Taluk | : | காரைக்குடி |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Religion | : | இந்து |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 22nd day of November 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் வணிக குற்றப்புலனாய்வு துறை சார்பு ஆய்வாளர் திரு.பாண்டியன் என்பவர் உடல் நிலை சரியில்லாமல் இருப்பதால் கு.வி.ந.மு.ச பிரிவு 311ன்படி கூடுதல் சாட்சியாக என்னை விசாரணை செய்ய மனுதாக்கல் செய்யப்பட்டு அந்த மனு அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 11.12.2006ம் வருடம் 12.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.பாண்டியன் என்பவர் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சென்னை வணிக குற்றப்புலனாய்வு பிரிவு காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தபாலை பெற்று அதில் பெறப்பெற்ற புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 11/2006 பிரிவுகள், 408, 477(A)இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.37 ஆகும். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் செந்தில்குமார், இளங்கோ, சேது, லெட்சுமணன், இளங்கோவன், அன்புரோஸ், பாலசுப்பிரமணியன், முத்துதுரைச்சாமி, சுப்பிரமணிய பிள்ளை, செல்வராஸ், சண்முகசுந்தரம், சோனைமுத்து, பாலசுப்பிரமணியம் ஆகியோர்களை விசாரித்து தனி

தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரி 18.01.2007 அன்று இராமநாதபுரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றுவிட்டதால் அவரை கைது செய்யவில்லை. விசாரணையின் அடிப்படையிலும், சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும், கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், எதிரி மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால் எதிரி மீது பிரிவு 408, 477(A) இதசவின்படி 30.03.2007ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

எதிரி தரப்பில் கு.வி

எந்தவொரு வழக்காக இருந்தாலும், அந்த வழக்கை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தான் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த முடியும் என்றால் ஆமாம். இந்த வழக்கின் சம்பவம் எப்போது நடந்தது என்றால் 2002ல் இருந்து 2003 வரை ஆகும். புகார் வந்தது எப்போது என்றால் 2006ல் வந்தது. பொதுவாக குற்ற வழக்கு எந்த வழக்காக இருந்தாலும், குற்றம் நடந்து 24 மணிநேரத்திற்குள் புகார் கொடுக்க வேண்டும் என்பது சட்டவிதி என்றால் அவ்வாறு இல்லை. இந்த வழக்கில் 2006ல் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குண்டான காலதாமதம் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் கூட்டுறவு சங்கங்களின் அடிப்படையில் விசாரணை முடிக்கப்பட்டு, முறைப்படி தகவல் கொடுத்ததின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்துள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிவு 81ன் விசாரணை 27.01.2006ல் முடிக்கப்பட்டுள்ளது, முதல்தகவல் அறிக்கையானது 11.12.2006ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குண்டான காலதாமதம் முறையாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 11 மாதங்கள் கழித்து தான் புகார் பெறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். புகார் பெற்றவுடனே எதிரியை அழைத்து விசாரணை செய்வதற்கு எங்களுக்கு அதிகாரம் உள்ளதா என்றால் உள்ளது. அவ்வாறு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்யப்பட்டதா என்பதற்குண்டான ஆவணம் எதுவும் இல்லை. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள் உரிய நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் பல மாதங்கள் கழித்து தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். இந்த வழக்கை விசாரணை செய்த அதிகாரி வேறொருவர் என்றாலும், அவர் சாட்சி சொல்ல வரமுடியாத காரணத்தினால்

அவர் விசாரணை செய்து வைத்திருந்த ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைத்தையும், விசாரணை அதிகாரி முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதாவது பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் உரிய அதிகாரியால் ஒப்புகை பெறப்பட்டுள்ளதா என்றால் அதிகாரம் பெற்ற நபர் தான் அந்த ஆவணங்களை விசாரணை அதிகாரியிடம் கொடுத்துள்ளார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஒப்புகை பெறாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரி எந்தவிதமான குற்றச்செயலும் செய்யவில்லை என்றாலும், மேலதிகாரிகள் செய்த தவறை மறைப்பதற்காக எதிரியின் மீது பொய்யான வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி முறையாக விசாரணை செய்யாமல் எதிரியின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார்என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படாததால் இந்தவ ழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆவணங்களின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை முழுமையாக விசாரணை செய்த விசாரணை அதிகாரி வந்து சாட்சியம் அளித்தால் தான் இந்த வழக்கின் உண்மை நிலை தெரியவரும் என்றாலும், நான் ஆவணங்களின் அடிப்படையில் அளித்த சாட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்